**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 378/2013**
**வழக்கு சாட்சி – அ.சா. 3.**

**சாட்சி திருமதி. சரஸ்மணி, த/பெ. சுப்பிரமணி.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2026.

**(3வது எதிரி ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

– – – – – –

**அ.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு, 1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், கூலி வேலை செய்து வருகிறேன். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால், அன்னஞ்சியில் குடியிருந்து வருகிறேன். எனது வீட்டுகாரரின் பெயர் என்ன என்றால் சோலை. அவர் உயிருடன் இருக்கிறாரா என்றால், எனக்கு 14 வயது இருக்கும்போது எனது கணவர் இறந்துவிட்டார். எனக்கு ஒரு மகள் உள்ளார். எனது கணவரின் இறப்பு சான்றிதழை போலிசார் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எனது கணவரின் வாரிசு சான்றிதழை போலிசார் விசாரணையில் கொடுத்தள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எனது கணவரின் தகப்பனார் பெயர் பீதாம்பர சேர்வை. பீதாம்பர சேர்வை எப்போது இறந்தார் என்றால் எனக்குத் தெரியாது. பீதாம்பர சேர்வையின் வாரிசு சான்றிதழை போலிசார் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது கணவரின் தாயார் பெயர் என்ன என்றால் ராமக்காள். பீதாம்பர சேர்வைக்கு அவர் எத்தனையாவது மனைவி என்றால் 3வது மனைவி. ராமக்காள் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. ராமக்காள் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை போலிசார் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் அந்த காலக்கட்டத்தில்

இருந்ததா என்று எனக்குத் தெரியாது. நானும், எனது மகளும், சேர்ந்து விற்ற சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது கணவர் சோலை சேர்வை பெயரில் இருந்த சொத்தை விற்றோம். யாருக்கு விற்றோம் என்றால் பொன்ராஜ் மற்றும் ராமசாமி என்பவருக்கு விற்றோம். எந்த வருடம் விற்றோம் என்றால் எனக்கு வருடம் ஞாபகம் இல்லை. நான் விற்பனை செய்த சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும் ஆனால் தற்போது எனக்கு நினைவில் இல்லை. நான் என்னுடைய சொத்து என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் பெரியகுளம் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் OS.No.236/1996 என்ற எண்ணில் 1, 2 எதிரிகள் மீது தாக்கல் செய்து அந்த வழக்கு 04.08.1998 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். (சாட்சி எனக்கு ஞாபக சக்தி குறைவாக உள்ளது என கூறுகிறார்). மேற்படி OS.No.236/1996 என்ற வழக்கில் காண்பிக்கப்பட்ட சொத்தைதான் அசா.1 பொன்ராஜிற்கு விற்பனை செய்தோம் என்றால் சரிதான். மேற்படி சொத்தைதான் அசா.1 ற்கு நான் மோசடியாக விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்த சொத்திற்கு அடங்கல், பட்டா போன்ற ஆவணங்கள் இல்லாமல் நான் மோசடியாக விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல. 1998ம் வருடம் பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் மீண்டும் OS.No.302/1998 – 1, 2 எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கும் எனது தவறுகைக்காக 31.01.2001 ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் மேற்படி இரண்டு வழக்குகளையும் நடத்தாமல் தள்ளுபடியாகிவிட்டது என்றாலும், நான் மோசடியாக அசா1 ற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை நடத்தினால் சொத்து யாருக்கு சொந்தம் என்று தெரியவரும் என்பதால் மேற்படி வழக்கை நடத்தாமல் தள்ளுபடி ஆகவிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளை எனக்கு யார் என்றே தெரியாது. OS.No.236/1996 மற்றும் OS.No.302/1998 ஆகிய வழக்குகளில் குறிப்பிடப்பட்ட சொத்து 1, 2 எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், நான் அதை மறைத்து மோசடியாக அசா.1ற்கு கிரையம் செய்து கொடுத்து அசா1ற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 யார் மீது போலிசில் புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்குத்

தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால், என்னை விசாரிக்கவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.01.23 18:55:30 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**